1975 ஏப்ரல் 18]

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2-ம், 3-ம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1974) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள் சிறு இனும் கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்-சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 61/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மேற்சொன்ன சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட நடுவர்மன்றம் ஒவ் வொன்றும் வழக்கு ஒன்றை அல்லது மேல் முறையீடு ஒன்றை விசாரணை செய்யும்போது 1908-ஆம் ஆண்டு சிவில் நடைமுறை விதிக்கோவையின் கீழ் (மத்தியச் சட்டம் 5/1908) சிவில் நீதி மன்றம் ஒன்றில் நிலை

@ 201-204 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப் பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 ஏப்ரல் 18

பெற்றுள்ள அந்த அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு தமிழ் நாடு 1963-ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழித்தல்-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 26/1963) 8-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவும், தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1963) 7-ஆவது பிரிவைச் சேர்ந்த (4)-வது உட்பிரிவும் வகை செய்கின்றன. தமிழ் நாடு 1963-ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 46-ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழும் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1963) 30 ஆவது பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின் கீழும் சிறப்பு மேல்முறையீட்டு நடுவர் மன்றத்திற்கு இதே போன்ற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1908 ஆம் ஆண்டு சிவில் நடைமுறை விதிக் கோவையினை (மத்தியச் சட்டம் 5/1908) 51 (டி) பிரிவும், 1 ஆவது விதியின் 40 ஆவது ஆணையும் சொத்து நிர்வாகி (ரிசீவர்) ஒருவரையும் மேற்சொன்ன விதிக்கோவையின் 26 ஆவது ஆணை கமிஷனர் ஒருவரையும் நியமிப்பதற்கு வகை செய்கின்றன. பல வழக்குகளில் நடுவர் மன்றங்கள் நிர்வாகிகளை நியமிப்பதால், நிலத்தைப் பயிரிடுபவர்களுக்கு நிலத்தில் சுவாதீனம் இல்லாமற் போகிறது என்று முறையீடு செய்யப்பட்டுள்ளது. உண்மையில் நிலத்தைப் பயிரிடுபவர்களுக்கு இதனல் இடையூறு ஏற்பட்டுள்ளது. எனவே நடுவர் மன்றம் அல்லது பிரிவு அதிகார மன்றத்தின் முன் ஒரு நிலம் குறித்து நடவடிக்கை எதுவும் முடிவு பெருத நிலையில் அத்தகைய நடுவர் மன்றம் அல்லது பிற அதிகார மன்றம் சொத்து நிர்வாகியையோ அல்லது கமிஷனரையோ நியமிக்கக்கூடாது என்று அரசு முடிவு செய்துள்ளது. மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க இச் சட்டம் வகை செய்கிறது. சட்டம் இயற்றுவதற்கான விதிமுறை சிறு தலைப்பு 2 (3), 3 (3) பகுதிகள் ஆகியவற்றிற்கு திருத்தங்கள் இச்சட்ட வரைவுப் பகுதி பகுதியாகப் பரிசீலனை செய்யும்போது முன்மொழியப்படும். இச் சட்ட வரைவினை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மேலவையைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்-சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 61/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2-ம், 3-ம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

1975 ஏப்ரல் 18]

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்-சிறு இனும்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : அவைமுன் உள்ள பிரச்சினை :

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு-1975 ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்-சிறு இனும்கள் (ஒழித்தல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974) நிறைவேற்றப்பட வேண்டும் ."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1975)

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

அரசு நிலம் ஒன்றை உரிமையின்றி அனுபவித்து வருபவரை, வருவாய்த்துறை அதிகாரிகளும், "அதிகாரம் பெற்ற அதிகாரி" எனப்படும் மாநில அரசால் உரிமையளிக்கப்பட்ட அதிகாரியும் தமிழ்நாடு 1905 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1905) 6ஆவது பிரிவிற்கிணங்க வெளியேற்றலாம். பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப்பட்டணிகள் துறை ஆகிய இத்துறைகளின் பொறுப்பிலுள்ள நிலங்களைப் பொறுத்தமட்டில், அவற்றில் ஏற்படும் நில ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க மேற்கூறிய துறைகளின்

@ 167–168 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.